www.Padasalai.Net. www.Trb Tnpsc.com of 2.

TRTJ

# மூன்றாம் திருப்புதல் தேர்வு – 2024

10 - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **15 x 1 = 15**

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. 'உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம், உனக்கு புகழ்ச்சிகள் கூறுகின்றோம்' - பாரதியின் இவ்வரிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

3. 'வெற்றி வேற்கை' என்றழைக்கப்படும் நூல் எது?
அ) எட்டுத்தொகை ஆ) நற்றிணை இ) திருத்தொண்டர் தொகை ஈ) நைடதம்

4. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ..................
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

6. வாய்மையே மழைநீராக - இத்தொடரில் வெளிப்படும் அணி .....................
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

7. 'எற்பாடு' என்பது .........
அ) ஞாயிறு உதிக்கும் நேரம் ஆ) ஞாயிறு மறையும் நேரம்
இ) நண்பகல் நேரம் ஈ) நடுஇரவு நேரம்

8. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க
அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

9. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது ....................
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

10. 'இவள் தலையில் எழுதியதோ, கற்காலம் தான் எப்போதும்" ..... இவ்வடிகளில் கற்காலம் என்பது
அ) தலைவிதி ஆ) பழைய காலம்
இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

11. 'ஆடு' என்பதன் கூட்டப்பெயர்.........
அ) கூட்டம் ஆ) மந்தை இ) நிரை ஈ) குவியல்

**பாடலை படித்து வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடையளிக்க.**

*உய்முறை அறியேன்; ஓர்ந்த*
*உணர்வினொத்து உறுப்பும் இல்லா*
*மெய்முறை அறியேன்; மெய்தான்*
*விரும்பிய உணவுதேடச்*
*செய்முறை அறியேன் ; கானில்*
*செல்வழி அறியென் ; தாய்தன்*
*கைமுறை அறிந்தேன் தாயும்*
*கழிந்தெனைத் தனித்துப் போனாள்"*



kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com of 2.

www.Padasalai.Net. www.Trb Tnpsc.com of 2.

12. இப்பாடல் இடம்பெற்ற நூல்
அ) சிலப்பதிகாரம் ஆ) முல்லைப் பாட்டு இ) பரிபாடல் ஈ) தேம்பாவணி

13. இப்பாடலின் ஆசிரியர் ..............................
அ) இளங்கோவடிகள் ஆ) வீரமாமுனிவர் இ) குமரகுருபரர் ஈ) கீரந்தையார்

14. மெய்முறை என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.
அ) வினைத் தொகை ஆ) வேற்றுமைத் தொகை
இ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை ஈ) உவமைத் தொகை

15. இப்பாடலில் கான் என்பதன் பொருள்
அ) உணவு ஆ) காணுதல் இ) காடு ஈ) வழி

II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி. வினா எண். 21 கட்டாய வினா. 4 x 2 = 8

16. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ) உயிரினங்களில் மனிதரை உயர்த்திக் காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலே.
ஆ) சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாத் திகழ்பவை நிகழ்கலைகள்

17. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

18. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

19. சதாவதானம் என்றால் என்ன?

20. தற்கால உரை நடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

21. 'பொருள்' என முடியும் குறளை எழுதுக.

III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. 5 x 2 = 10

22. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரை இணைக்க.
*நேற்று என்னைச் சந்தித்தார் ; அவர் என் நண்பர்.*

23. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடரை முழுமை செய்க.
*பசுமையான .........ஐக்.......... கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)*

24. பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
அ) உழவர்கள் மலையில் உழுதனர்
ஆ) முல்லை பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்

25. கலைச் சொல் எழுதுக. அ) Tempest ஆ) Whirlwind

26. பழமொழியை நிறைவு செய்க.
அ) உப்பிட்டவரை .............................................. ஆ) விருந்தும் மருந்தும் ..............................

27. சொற்களைப் பிரித்துப் பார்த்து பொருள் தருக. : பலகையொலி.
குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.
கூட்டப்பெயர்களைக் காண்க. அ) புல் ஆ) கல்

28. அருணா ஓடினாள் - பெயரெச்சமாகவும், வினையெச்சமாகவும் மாற்றுக.

IV. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி. 2 x 3 = 6

29. *'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'*. இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.



kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com of 2.

www.Padasalai.Net. www.Trb Tnpsc.com of 2.

31. **பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும். பாட்டும், வசனமும் இல்லாத ஆட்டங்களில் புலி ஆட்டமும் ஒன்று. விழாக்களில் புலி வேடமிடுவோர் உடம்பெங்கும் புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக்கோடுகளையிட்டுத் துணியாலான வாலை இடுப்பில் கட்டிக் கொள்வர். தப்பு மேளத்திற்கேற்ப ஒருவரோ, இருவரோ, ஆடுவர். புலியைப் போன்று நடந்தும், பதுங்கியும், பாய்ந்தும் எம்பிக்குதித்தும் நாக்கால் வருடியும் பற்கள் தெரிய வாயைப் பிளந்தும் உறுமியும் பல்வேறு அடவுகளை வெளிப்படுத்துகின்றனர்.

அ) தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் நிகழ்கலை எது?

ஆ) புலி ஆட்டம் ஆடுவோர் எத்தகைய அடவுகளை வெளிப்படுத்துகின்றனர்?

இ) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பை எழுதுக.

**V. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி. வினா எண். 34 கட்டாய வினா.** 2 x 3 = 6

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33. மன்னன், இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்?

34. 'வாளால்' - எனத்தொடங்கும் பெருமாள் திருமொழி பாடலை அடிமாறாமல் எழுதுக. ***(அல்லது)***

'வெய்யோன்' - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

**VI. எவையேனும் 2 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி.** 2 x 3 = 6

35. மூவகை மொழிகளை எடுத்துகாட்டுகளுடன் விளக்குக.

36. *அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது* - இதில் பயின்று வரும் அணியை விளக்குக.

37. *கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய*
*கோடிஉண் டாயினும் இல்.* - அலகிட்டு வாய்பாடு தருக.

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5 x 5 = 25

38. அ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்கு பாராட்டுரை ஒன்றினை எழுதுக. ***(அல்லது)***

ஆ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

39. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுந்தடைந்துள்ளன அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவணச் செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக. ***(அல்லது)***

ஆ) நீங்கள் விரும்பி படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறுப் பரிந்துரைத்துக் கடிதம் எழுதுக.

40. **படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக.**





kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com of 2.

www.Padasalai.Net. www.Trb Tnpsc.com of 2.

41. எண்-6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழழகனின் மகன் இளந்திரையன், கணினிப் பயிற்றுநர் பணிவேண்டி தன் விவரப்பட்டியல் நிரப்புகிறார். தேர்வர் தன்னை இளந்திரையனாகப் பாவித்து பணிவாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியலை நிரப்புக.

42. அ) அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை போன்று நீவிர் கண்ட பல்வேறு பழமையான நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்துப் பராமரித்துக் காக்கும் வழிமுறைகள் ஐந்தினை பட்டியலிடுக. ***(அல்லது)***

**ஆ) தமிழில் மொழிபெயர்த்துத் தலைப்பிடுக.**

Malar : Devi, switch off the lights when you leave the room

Devi : Yeah! we have to save electricity

Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night

Devi : Who knows? In future our country may launch artificial mooons to light out night time sky!

Malar : I have read some other countries are going to launch these types of illumination satellites near futre.

Devi : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areass that lost power!.

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா. உரைபத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும். பல அறிவுத் துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ள முடியும். மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும். வேலை வாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும். நாடு, இனமொழி எல்லைகள் கடந்து ஒருலகத் தன்மையைப் பெறமுடியும். நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டு தூதரகங்கள் நம் நாட்டில் நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில் வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக் கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிறமொழிகளைக் கற்றுத் தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பிற மொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1) ஒருலகத் தன்மையைப் பெறுவதற்கான முக்கிய வழி முறையாக எதனைக் கொள்ளலாம்?
2) பிறமொழிகளைக் கற்பதற்காந வாய்ப்புகளைத் தருவன எவை?
3) தூதராகங்ளின் முதன்மையான பணிகளில் ஒன்று எது?
4) மொழிபெயர்ப்புக் கல்வியின் பயன்களை எழுதுக. 5) இப்பத்திக்கு பொருத்தமான தலைப்பு இடுக.

**3 x 8 = 24**

**VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

43. அ) தமிழன் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக. ***( அல்லது )***

ஆ) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழைமையும் - அருகி வருவதற்கான காரணங்கள் - வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - பற்றி நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

44. அ) *``அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்''* என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக. ***( அல்லது )***

ஆ) அழகிரிசாமியின் *`ஒருவன் இருக்கிறான்'* சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

***(அல்லது)*** **ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

*முன்னுரை - தமிழகம் தந்த தவப்புதல்வர் - நாட்டுப்பற்று - மொழிப்பற்று - பொதுவாழ்வில் தூய்மை - மக்கள் பணியே மகத்தான பணி - முடிவுரை.*



www.Padasalai.Net

kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com of 2.